
உ
சிவமயம்



யாழ்ப்பாணம் - நீர்வேலி

ஸ்ரீமதி

# சிவயோகநாதன் சாவித்திரிதேவி

அவர்களின்

# நினைவு மலர்

08.05.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் – நீர்வேலி, ஓய்வுபெற்ற ஆசிரியர், அமரர்
ஸ்ரீமான் காசிப்பிள்ளை சதாசிவம், அவர்தம் மனையாள்
அமரர், ஸ்ரீமதி தில்லையம்பலம் மகள் வள்ளிப்பிள்ளை தம்பதியினரதும்
உசனைச் சேர்ந்த அமரர்கள் ஸ்ரீமான் கார்த்திகேசு – அமரர் ஸ்ரீமதி நாகமுத்து
தம்பதியினரின் புத்திரன் ஸ்ரீமான் சிவயோகநாதன், ஓய்வுபெற்ற மருத்துவ ஆய்வுகூட
வல்லுனர் அவர்களினதும் தர்மபத்தினி

ஸ்ரீமதி

# சாவித்திரிதேவியின்

# நினைவு மலர்

08.05.2009

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ௐ

# சமர்ப்பணம்

எம் இதயத் தெய்வத்தின் ஆத்மா
படைத்தவன்பாத மலரில்பேரின்பப்
பெருநிலையில்
சாந்திபெற
திரிகரண சுத்தியுடன்
இம்மலரை
அமரர்தம் பூப்போன்ற
பாதக் கமலத்தில்
உளம் உருக
கரம்கூப்பித் தலைவணங்கி
கண்ணீர்மல்க
சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நீர்வேலி.
08.05.2009

கணவன்,
மகன், மகள்,
பேரர்,
மருகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓம் கணபதயே நம:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

"எல்லையிலாப் பேரின்பத்தில் -
என்றும் எம் இதயக் கமலத்தில்"



அன்னை மடியில்
05.12.1943

ஆண்டவன் அடியில்
08.04.2009

அமரர்

# ஸ்ரீமதி சாவித்திரிதேவி சிவயோகநாதன்

அவர்கள்

## தித்தித்த திதி

ஆண்டு சர்வதாரி பூர்வபக்க சதுர்த்தசியில்
வேண்டும் பங்குனி உத்தரமாம் - நன்னாளில்
மீண்டனளே எம்தலைவி பூவோடும் பொட்டோடும்
ஆண்டவனின் பொற்பாதம் தான்கண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

யாழ்ப்பாணம் – நீர்வேலி, ஓய்வுபெற்ற ஆசிரியர், அமரர்
ஸ்ரீமான் காசிப்பிள்ளை சதாசிவம், அவர்தம் மனையாள்
அமரர், ஸ்ரீமதி தில்லையம்பலம் மகள் வள்ளிப்பிள்ளை தம்பதியினரதும்,
உசனைச் சேர்ந்த அமரர்கள் ஸ்ரீமான் கார்த்திகேசு – அமரர் ஸ்ரீமதி நாகமுத்து
தம்பதியினரின் புத்திரன் ஸ்ரீமான் சிவயோகநாதன், ஓய்வுபெற்ற
மருத்துவ ஆய்வுகூட வல்லுனர் அவர்களினதும் தர்மபத்தினி

ஸ்ரீமதி

# சாவித்திரிதேவியின்

## வாழ்க்கை வரலாறு

**தோற்றம்** : 05.12.1943

**கல்வி பயின்ற கூடங்கள்:**
*ஆரம்பக் கல்வி:*
*நீர்வேலி, அத்தியார் இந்துக் கல்லூரி.*
*உயர்கல்வி:*
*இராமநாதன் மகளிர்கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம்.*

**திருமணம் :** *26.10.1970*

**உடன் பிறப்பினர்:**
*ஸ்ரீமான் ச. சண்முகநாதன் (ஓய்வுபெற்ற அரச சேவையாளர்)*
*ஸ்ரீமான் ச. சிவகுருநாதன் (ஓய்வுபெற்ற அரசசேவையாளர்)*

**பிள்ளைகள்:**
*ஸ்ரீமதி கலைச்செல்வி சேரலாதன் (முன்னைநாள் ஆசிரியர்)*
*ஸ்ரீமான் சிவயோகநாதன் தயாபரன் (கதிரியக்கவியலாளர், யாழ். போதனா வைத்தியசாலை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மருகர், மருகியர்:**

ஸ்ரீமான் க.சேரலாதன்
(கணிய அளவையியலாளர், அபுதாபி)
ஸ்ரீமதி ஜீவரேகா தயாபரன்
(ஆசிரியை, பிரான்பற்றுக் கலைமகள் வித்தியாலயம்)
ஸ்ரீமான் சி.இராமநாதன்
ஸ்ரீமதி இ.சலசா
ஸ்ரீமான் க.கிருபாகரன்
ஸ்ரீமதி கி.சுதர்சினி
செல்வி ச.கிரிஜா
ஸ்ரீமான் சந்திரகுமார் (ஆசிரியர்)
ஸ்ரீமதி பாமினி சந்திரகுமார்

**மைத்துனர் மைத்துனிமார்:**

ஸ்ரீமதி தவமணி சண்முகநாதன்
ஸ்ரீமதி சுபத்திராதேவி சிவகுருநாதன்
ஸ்ரீமான் க.கனகமாணிக்கம்
ஸ்ரீமதி கனகமாணிக்கம் சர்வேஸ்வரி
ஸ்ரீமான் க.வரதராஜலிங்கம்.
ஸ்ரீமதி ஜீவமலர் வரதராஜலிங்கம்
ஸ்ரீமான் கா.முருகேசு,
ஸ்ரீமான் கா.இராமநாதர்,
அமரர் ஸ்ரீமான் கா.விநாசித்தம்பி,
அமரர் ஸ்ரீமதி மா.முத்துப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாசமிகு பேரர்:** செல்வி சே. அர்ச்சனா
செல்வி த. அபரஜிதா

**விண்ணக விரைவு:** சர்வதாரி வருடம் பங்குனி மாதம் 26ஆம் நாள் புதன்கிழமை வளர்பிறை சதுர்த்தசி திதியன்று முற்பகல் (08.04.2009) விழித்துக் கண்டனள் மெய்ப்பொருள் தன்னை.

எமக்கெலாம் ஆருயிர் அன்னையாய், இதய மலராய், பற்றுடைச் சோதரியாய், அன்பு மாமியாய், பாசமிகு இனிய பாட்டியாய், வனப்புமிகு உறவினராய், உடன் பிறவாச் சோதரியாய், அயலில் எவர்க்குமினிய நண்பியாய், அன்பொழுக மலர்ந்த வதனமுடையவராய், அமைதியாய், அடக்கமாய், ஓர் மங்கையர் திலகமாய் என்றும் என் கண்குளிர வாழ்ந்த குணவதியின் திடீர் மறைவு எமக்கெலாம் பேரதிர்ச்சியை நல்கிய நிகழ்வாகவே அமைந்துவிட்டது. தாய்க்குலம்போற்றும் தனக்குத் தானே இலக்கணம் வகுத்து வாழ்ந்துகாட்டிய ஒருவரைக் குடும்பமும் சுற்றமும் அயலும் இழந்து இன்றுடன் ஒரு திங்கள் ஆகிவிட்டது.

பூவுடனும் பொட்டுடனும் படைத்தவன் பாதமலர் சென்றடைந்த துணைவியே! தாயே! உடன்பிறப்பே! கட்டியணைத்து முத்தம் கொடுத்த பாட்டியே! உறவினரே ! சிந்தைகுளிர அனைவரையும் அரவணைத்து ஆதரித்த அம்மையே உங்கள் பிறப்பிறப்பற்ற பேரின்பப் பெருவாழ்வு பேராயிரம் பரவி எம்மான் ஏற்றும் திருவடியில் பேரின்பப் பெரும் சாந்தியுடன் அமைய கரம்கூப்பி, தலைவணங்கி, திரிகரணசுத்தியுடன் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி, சாந்தி,, சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணியின் கனிந்து.

## தேவாரம்

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனைமற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுப டாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன்.

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினும்
சொல்லும் நாநமச்சி வாயவே.

## திருவாசகம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாற்விறல் வேங்கையின் தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரானென்னைத் தாங்கிக்கொள்ளே.

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையுங்
குற்றாலத் தமர்ந்துரையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா கமாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## கந்தரலங்காரம்

நாளென்செயும் வினைதானென் செயும் எனைநாடிவந்த
கோளென்செயும் கொடுங்கூற்றென் செயும் குமரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே.

## கந்தரனுபூதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## அபிராமி அந்தாதி

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே.

## கந்தபுராணம்

புன்னறி யதனிச் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையு மடியனாக்கி இருவினை நீக்கியாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

எதிரிலாத பத்தி தனைமேவி
இனிய தாள் நினைப்பை இருபோதும்
இதயவாரிதிக்குள் உறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே
கதிர காம வெற்பில் உறைவோனே
கனகமேருவொத்த புயவீரா
மதுரவாணியுற்ற கழலோனே
வழுதி கூனிமிர்த்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## திருவாய்மொழி

திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன் பால் இன்று.

## வைரவக் கடவுள் துதி

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையுங் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்



திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகம் விளங்கும் சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும், இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே !
முப்பழம் நுகரும் மூஷிக வாகன !
இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்து அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்துஎன் உளந்தனிற் புகுந்து.
குருவடிவு ஆகிக் குவலயம் தன்னில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு அடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கு அருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என்செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயமும்
இன்புறு கருணையில் இனிதெனக்கு அருளிக்,
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்து எனக்கு அருளி,
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே,
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே,
இடை பிங்கலையின் எழுத்து அறிவித்து
கடையிற் சுழுகுமுனைக் கபாலமும் காட்டி,
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்,
குண்டலி அதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து,
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
கலால் எழுப்பும் கருத்து அறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி,
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்,
சண்முக தூலமும் சதுர்முகச் சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக்கு அருளிப்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரி எட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி,
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி,
என்னை அறிவித்து எனக்கு அருள்செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தத்து அழுத்தி, என்செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே, அருள்வழி காட்டிச்,
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்,
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி,
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி,
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்,
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி,
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்துத்,
தத்துவ நிலையைத் தந்து எனைஆண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர் வணக்கம்

## கண்ணிகள்

உற்றவரே எனைப் பெற்றவரே தினம்
உமக்கே நமஸ்காரம்;
முற்றுமே நீர்செய்த உதவிக்கு நான்என்ன
மொழிவேன் உபசாரம்!

பத்துமாதம் எம்மை வயிற்றிலே சுமந்து
பலதுயர் சகித்தீரே;
எத்தனை பிராண சங்கட முடனெமை
ஏற்றுநிர் வகித்தீரே!

தேனினும் அமிழ்தினும் இனிதே எமக்குநீர்
செப்பிய தாலாட்டு;
வானின் அமரர்க்கும் வருமோ இதுபோல்
மங்கலத் திருப்பாட்டு!

கவலை எல்லாம்எம் கவலை அல்லால் வேறு
கவலையொன் றறியீரே;
புவியிலே எம்சுகம் அல்லது வேறொரு
பொருளையும் குறியீரே!

பால வியாதிகள் எமைஅணு காமலே
பத்தியம் பிடித்தீரே;
காலம் எல்லாம்பல விரதங்கள் அனுட்டித்துக்
கருமங்கள் முடித்தீரே.

இரவு முழுதுமே தூங்கா திருந்துநீர்
எம்தனைக் காத்தீரே;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவு முதற்பல ஜந்துக்க ளால்வரும்
ஆபத்தைத் தீர்த்தீரே.

தரணியில் எம்சுகம் வேண்டியே நீர்பல
தருமங்கள் செய்தீரே;
கருணை செய்யும்படி கடவுளைத் துதித்துநல்
காணிக்கை செய்தீரே.

பாலும் சோறும்பட் சணங்களும் எமக்கிட்டுப்
பழஞ்சோறு உண்டீரே;
காலமெல் லாம்நல்ல சோமன்நாம் உடுக்கநீர்
கந்தையைக் கொண்டீரே.

காணாத் தெய்வத்தின் அருளா லேவந்த
கண்கண்ட தெய் வம்நீரே;
ஆணாப் பெண்ணாஇ ராஅந்தத் தேவையும்
அன்னை தந்தை என்பாரே.

## காயத்திரி மந்திரம்

*ஓம்! பூர்புவ: ஸ்ஸுவ: !*
*தத் ஸவிதுர் வரேண்யம் !*
*பர்கோ தேவஸ்ய தீமஹி!*
*தியோ யோ நஃ ப்ரசோதயாத்!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி?

எத்தனைஊர் ஏத்தனைவீடு எத்தனைதாய் பெற்றவர்கள்
எத்தனைபேர் இட்டுஅழைக்க ஏன்என்றேன் - நித்தம்
எனக்குக் களை ஆற்றாய் ஏகம்பா கம்பா
உனக்குத் திருவிளையாட் டோ.

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பால்உன் கடைவாய்ப் படும்முன்னே - மேல்விழுந்தே
உற்றார் அழும்முன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு.

சிற்றம் பலமும் சிவனும் அருகுஇருக்க
வெற்றம் பலம்தேடி விட்டோமே - நித்தம்
பிறந்தஇடம் தேடுதே பேதைமட நெஞ்சம்
கறந்தஇடம் நாடுதே கண்.

ஆவியொடு காயம் அழிந்தாலும் மேதினியில்
பாவிஎன்று நாமம் படையாதே - மேவியசீர்
வித்தார மும்கடம்பும் வேண்டாம் மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி.

இருப்பதுபொய் போவதுமெய் என்றுஎண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினைஉன் னாதே - பருத்ததொந்தி
நம்மதுஎன்று நாம்இருப்ப நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதுஎன்று தாம்இருக்கும் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகர் சுவாமிகள் நற்சிந்தனைகள்

## அத்துவிதப் பொருள் காப்பாம்

அத்துவி தப்பொருள் காப்பாம் - எனக்
கடியார்க ளென்றென்றுங் காப்பாம்
சித்தருந் தேவருங் காப்பாம் - என்றன்
சித்தத் திலங்குந் திருவருள் காப்பாம் (அத்து) 1

அட்ட வசுக்களுங் காப்பாம் - எனக்
கானந்த மான பராபரன் காப்பாம்
எட்டுத் திசைகளுங் காப்பாம் - எனக்
கெங்கும் நிறைந்த சிவசக்தி காப்பாம் (அத்து) 2

பிராண னபானனுங் காப்பாம் - என்னைப்
பிரியா திருக்கும் பிரணவங் காப்பாம்
அராவணி வேணியன் காப்பாம் - எனக்
கருளை யளிக்குங் குருபரன் காப்பாம் (அத்து) 3

பஞ்சப் புலன்களுங் காப்பாம் - என்னைப்
பரவு மடியவ ரனுதினங் காப்பாம்
குஞ்சர முகத்தவன் காப்பாம் - நல்ல
குழந்தை வடிவேலன் என்றென்றுங் காப்பாம் (அத்து ) 4

சந்திர சூரியர் காப்பாம் - எங்குந்
தங்கு முயிர்க ளனைத்துமென் காப்பாம்
மந்திரந் தந்திரங் காப்பாம் - நான்கு
மறைகள் சிவாகமம் மாநிலங் காப்பாம் (அத்து ) 5

## நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி - கிளியே!
இரவுபகல் காணேனெடி 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி - கிளியே!
நல்லூரான் தஞ்செமடி 2

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி - கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி 3

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் - கிளியே
காவல் அறிந்திடெடி 4

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி 5

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாட்டைந்தும்
பூமியிற் சொன்னாலெடி - கிளியே
பொல்லாங்கு தீருமெடி 6

## எல்லாஞ்சிவமே

அப்பனும் அம்மையுஞ் சிவமே அரிய சகோதரருஞ் சிவமே
ஒப்பில் மனைவியுஞ் சிவமே ஓதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசருஞ் சிவமே தேவாதி தேவருஞ் சிவமே
இப்புவி யெல்லாஞ் சிவமே என்னை யாண்டதுஞ் சிவமே

## ஏதும் இயம்ப மாட்டேன்

ஒருபொல்லாப்பு மிலையென ஓரவும் மாட்டேன்
குருவென்றுஞ் சீடனென்றுங் கொள்ளவும் மாட்டேன்
இருவினை யுண்டென இயம்பவும் மாட்டேன்
சுருதியின் முடிவெனச் சொல்லவும் மாட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம் ஜெய மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
முப்பொழுதுந் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்குந் தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

## சரணம் சரணம்

துர்க்கா சரணம் சரணம் தாயே
துர்க்கா சரணம் சரணம்
தேவி சரணம் சரணம் தாயே
தேவி சரணம் சரணம்
அம்மா சரணம் சரணம் தாயே
அம்மா சரணம் சரணம்
ஆத்தாள் சரணம் சரணம் தாயே
ஆத்தாள் சரணம் சரணம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

# நவில்கின்றோம் நன்றி !

- எம் குடும்பத்தலைவி நோயுற்றகாலை உடன் நின்று உரிய உதவிகளை ஆற்றிய வைத்திய சிரோன்மணிகள்;
- தாதிமார் சகோதரிகள் ;
- உடன் நின்று இறுதிவரை வேண்டிய உதவிகளை பற்றுடன் நல்கிய எம் அருமை நண்பர்கள்; உறவினர்கள்;
- தம் அனுதாபத்தை தொலைபேசி, கடிதம், செய்தித்தாள், அஞ்சலிப் பிரசுரம்மூலம் தெரிவித்தோர்;
- மலர்வளையம் சாத்தியோர்;
- அந்தியேட்டி, சபிண்டீகரண காலங்களில் கலந்து கொண்டோர்;



- சகல கிரியைகளையும் சிறப்புற நடாத்தி வைத்த அந்தணப் பெரியோர்;
- இம்மலரினை சிறப்புற அச்சிட்டு உதவிய கரிகணன் பிறிண்டேர்ஸ்;
- ஆகிய எல்லோருக்கும் எம் உளம் கனிந்த நன்றியைக் கரம்கூப்பி நவில்கின்றோம்.

**நன்றி**



நீர்வேலி.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

—பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org